**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி,**

**முன்னிலை: திருமதி. B. ஹரிணிபிரியா, B.A., L.L.B.,(Hons).,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08ஆம் நாள் புதன் கிழமை**

**அசல் வழக்கு எண்.11/2019.ல்**

**வழக்கிடை மனு எண்.415/2022**

வெற்றிவேல், அதிகாரம் பெற்ற முகவர்
தண்டபாணி மூலம் ... மனுதாரர்/வாதி

..எதிர்..

1.லெட்சுமி
2.ஈஸ்வர்
3.இளவர் புவனேஷ்வர்
3ம் எதிர்வாதி பை காப்பாளர் முதலெதிர்வாதி
4.கோசலை (28.06.2022ல் இறந்தார்
பை வாரிசுகள் 5, 6 எதிர்மனுதாரர்கள்)
5.செந்தில்
6.கஸ்தூரி
... எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள்

இம்மனுவானது 26.10.2022ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 28.10.2022ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.இராம.விஸ்வேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், 1வது முதல் 3வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் கி.கதிரவன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாலும், 5, 6 எதிர்மனுதார்கள் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். இம்மனு 25.06.2025ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது இரு தரப்பு வாதங்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக 4ம் எதிர்மனுதாரருக்கு வாரிசு சேர்க்க அபேட்மெண்ட் ஆனதை மன்னித்து அபேட்மெண்டை ரத்து செய்ய உத்திரவிட கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை தொகுப்பு சட்டத்தின் ஆணை 22 விதி 9 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2. மனு சங்ககதிகளின் சுருக்கம்**

**2.1** மனுதாரர், வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் என்றும் வாதி தனது குமாரர் என்றும், தான் வழக்குச் சொத்தைப் பொருத்து விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கிடை காலத்தில் 4ம் எதிர்வாதி யாதொரு ஏற்பாடும் செய்யாமல் 28.06.2022ல் காலமாகிவிட்டார் என்றும் 4ம் எதிர்வாதி கணவர் காலமாகிவிட்டார். அவ்வகையில் காலமான 4ம் எதிர்வாதிக்கு 5ம் எதிர்மனுதாரர் மகன் என்றும், 6ம் எதிர்மனுதாரர் மகள் என்றும், காலமான 4ம் எதிர்வாதிக்கு 5, 6 எதிர்மனுதாரர்களை தவிர வேறு வாரிசுகள் கிடையாது என்றும் இந்நிலையில் 28.06.2022ல் காலமான 4ம் எதிர்மனுதாரருக்கு 90 நாட்களுக்குள் அதாவது 26.09.2022க்குள் வாரிசு மனுதாக்கல் செய்யாததால் வழக்கு அபேட்மெண்ட் ஆகிவிட்டது. எனக்கு சட்ட ஞானம் இல்லாததால் தன்னால் உரிய காலத்தில் வாரிசு மனு சேர்க்க முடியவில்லை. தான் உரிய காலத்தில் வாரிசு மனு சேர்க்காதது என்பது தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒன்றாகும். வேண்டுமென்றோ அலட்சியமாகவோ ஏற்பட்டதல்ல. 4ம் எதிர்மனுதாரருக்கு வாரிசு சேர்க்க அபேட்மெண்ட் ஆனதை மன்னித்து அபேட்மெண்டை ரத்து செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாகவும் உள்ளது. இல்லலையேல் தனக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும்.

*3. 1* **முதல்** *3* **எதிர்மனுதாரர்களின் எதிருரையின் சுருக்கம்**

*3.1* மனுதாரர் தற்சமயம் ஊரில் உள்ளதால் அவரின் முகவர் என்ற முறையில் ஆணையுறுதிப்பத்திரம் தாக்கல் செய்துள்ளதை எதிர்மனுதாரர்கள் ஆட்சேபிக்கிறார்கள். 4ம் பிரதிவாதி இறந்தது மனுதாரருக்கு நேரிட்டு தெரியும். அதற்கு பின்னிட்டு உடன் வாரிசு மனு தாக்கல் செய்திருக்க முடியும். அசல் வழக்கில் மனுதாரருக்கு கூடிவரக்கூடிய கட்சி எதுவும் இல்லாததால் வழக்கினை இழுத்தடிப்பதற்காக வேண்டுமென்றே இருந்துவிட்டு தற்சமயம் சட்ட ஞானம் இல்லை என்று பொய்யுரைத்து காலம் கடந்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

*4.* இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

*5.* **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.**

*5.1* மனுதாரரர் தரப்பு வாதம் என்னவெனில் அசல் வழக்கின் வழக்கிடை காலத்தில் 4ம் எதிர்வாதி யாதொரு ஏற்பாடும் செய்யாமல் 28.06.2022ல் காலமாகிவிட்டார் என்றும் 4ம் எதிர்வாதி கணவர் காலமாகிவிட்டார். அவ்வகையில் காலமான 4ம் எதிர்வாதிக்கு 5ம் எதிர்மனுதாரர் மகன் என்றும், 6ம் எதிர்மனுதாரர் மகள் என்றும், காலமான 4ம் எதிர்வாதிக்கு 5, 6 எதிர்மனுதாரர்களை தவிர வேறு வாரிசுகள் கிடையாது என்றும் இந்நிலையில் 28.06.2022ல் காலமான 4ம் எதிர்மனுதாரருக்கு 90 நாட்களுக்குள் அதாவது 26.09.2022க்குள் வாரிசு மனுதாக்கல் செய்யாததால் வழக்கு அபேட்மெண்ட் ஆகிவிட்டது. எனக்கு சட்ட ஞானம் இல்லாததால் தன்னால் உரிய காலத்தில் வாரிசு மனு சேர்க்க முடியவில்லை என்று வாதிடப்பட்டுள்ளது.

*5.2* எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் என்னவெனில் மனுதாரர் தற்சமயம் ஊரில் உள்ளதால் அவரின் முகவர் என்ற முறையில் ஆணையுறுதிப்பத்திரம் தாக்கல் செய்துள்ளதை எதிர்மனுதாரர்கள் ஆட்சேபிக்கிறார்கள். 4ம் பிரதிவாதி இறந்தது

மனுதாரருக்கு நேரிட்டு தெரியும். அதற்கு பின்னிட்டு உடன் வாரிசு மனு தாக்கல் செய்திருக்க முடியும். அசல் வழக்கில் மனுதாரருக்கு கூடிவரக்கூடிய கட்சி எதுவும் இல்லாததால் வழக்கினை இழுத்தடிப்பதற்காக வேண்டுமென்றே இருந்துவிட்டு தற்சமயம் சட்ட ஞானம் இல்லை என்று பொய்யுரைத்து காலம் கடந்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்று வாதிடப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கின் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்கையில் அசல் வழக்கில் 4ம் எதிர்வாதியான கோசலை கடந்த 28.06.2022ல் இறந்தார் என்றும் அவரின் வாரிசுகளாக 5ம் எதிர்மனுதாரர் செந்தில் என்பவர் மகன் என்றும் 6ம் எதிர்மனுதாரர் கஸ்தூரி மகள் என்பதும் தெரியவருகிறது. மேற்படி 5, 6 மனுதாரர்களை தவிர இறந்த 4ம் எதிர்வாதிக்கு வேறு வாரிசுகள் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்படியார்களை வாரிசுகளாக கண்டும் வழக்கினை தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் இறந்து போன 4ம் எதிர்வாதி கோசலையின் பிரதிநிதிகள் என்பதால் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. எனினும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / எதிர்வாதிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள், நேரம் மற்றும் பொருள் விரயத்தை அதற்குரிய செலவுத்தொகை வழங்கி ஈடுகட்டி, அசல் வழக்கின் மேல் நடத்த மேல்நடத்தும் பட்சத்தில் தான் வழக்கினை திறம்பட தீர்மானிக்க இயலும் என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவினை நிபந்தனைகளின் பேரில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. **இறுதியாக**

இம்மனு மனுதாரர்/வாதி, 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / எதிர்வாதிகளுக்கு 30.10.2025 ஆம் தேதிக்குள்ளோ அல்லது அதற்கு முன்னரோ செலவுத்தொகையாக ரூ.300/-ஐ த்தை நேரடியாக கொடுக்கவேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு

தானாக தள்ளுபடியாகிவிடும் என்ற நிபந்தனையுடனும் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு *2025*ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் *08*ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :இல்லை

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.